# வேளாண்மைத் துறை

# அறிவிப்புகள்

<u>அறிவிப்புகள்</u>

**வேளாண்மைத்துறை**

**<u>விதை கிராமத் திட்டம்</u>**

தரமான விதை உற்பத்தியை மேற்கொள்ளும் வகையில் 50 சத மானியத்தில் 1600 மெ.டன் நெல் ஆதார விதைகளும், 50 மெ.டன் சிறுதானிய விதைகளும், 560 மெ.டன் பயறு வகை விதைகளும் மற்றும் 3600 மெ.டன் நிலக்கடலை விதைகளும் வழங்கப்படுவதுடன், 4 லட்சம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

விதைகளை பாதுகாப்பாக சேமித்து வைக்க 18,225 விதை சேமிப்பு கலன்கள், ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு 33 சத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 25 சத மானியத்திலும் வழங்கப்படும். உற்பத்தி செய்யப்படும் விதைகளை சேமித்து பாதுகாக்க 95 விதை சேமிப்பு கிடங்குகள் கட்டப்படும்.

இத்திட்டம் இந்நிதி ஆண்டில் (2009–2010) ரூ.46.50 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

## திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த வேளாண் அலுவலக வளாகம் அமைத்தல்

திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இரு மாவட்டங்களில் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம் மற்றும் விற்பனை, விதைச்சான்று மற்றும் வேளாண் பொறியியல் துறைகளுக்கான மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் ரூ.150 லட்சம் வீதம் இந்நிதி ஆண்டில் (2009–2010) ரூ.300 லட்சம் செலவில் இரண்டு ஒருங்கிணைந்த அலுவலக வளாகங்கள் கட்டப்படும்.

## <u>பயறு சாகுபடி செய்யும் விவசாயிகளின் விளைபொருட்களை பாதுகாக்க தார்பாய்கள் விநியோகம்.</u>

பயறு சாகுபடி செய்யும் விவசாயிகள் விளைபொருட்களை பாதுகாக்க திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், கோயம்புத்தூர், ஈரோடு, நாகப்பட்டினம், திருவாரூர், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 12 மாவட்டங்களில் 50 சதம் மானியத்தில் 4800 தார்பாய்கள் வழங்கப்படும். இத்திட்டம் இந்நிதி ஆண்டில் (2009–2010) ரூ.1 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

## இயற்கை பண்ணைய முறைகள் மூலம் அதிக உற்பத்தி திறன் பெறும் நெல் சாகுபடி விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்குதல்.

இயற்கை பண்ணைய முறைகளை கடைபிடித்து உற்பத்தி செய்ய இதுவரை சுமார் 25,000 ஏக்கர் பரப்பு அங்கக சான்றுத் துறையிடம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அங்கக சான்று பெற்று பதிவு செய்து இயற்கை பண்ணைய முறையில் நெல் சாகுபடி மேற்கொள்ளும், விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், நெல் விளைச்சல் போட்டியினை மாநில அளவில் நடத்தி, அதிகபட்ச உற்பத்தி திறன் அடையும் விவசாயிகளுக்கு முதல் பரிசாக ரூ.50 ஆயிரமும், இரண்டாம் பரிசாக ரூ.25 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ.10 ஆயிரமும் வழங்கப்படும்.

# வேளாண் விற்பனைத் துறை

## ஊரக வணிக மையம்

விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களுக்கு விற்பனைக்கான அதிகபட்ச வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவும் விவசாயிகளின் வேளாண் விளைபொருட்கள் அனைத்தும் ஒரே இடத்தில் பெறப்பட்டு, வியாபாரிகள் மற்றும் பதனிடுவோர் நேரடியாக கொள்முதல் செய்ய 10 ஊரக வணிக மையங்கள் அமைக்கப்படும்.

இந்நிதி ஆண்டில் (2009–2010) ரூ.150 லட்சம் செலவில் 10 ஊரக வணிக மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**<u>தக்காளிக்கென குளிர்பதன கிட்டங்கி</u>**

சேலம் மாவட்டம், மேச்சேரியில் தக்காளி சாகுபடி செய்யும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் இந்நிதி ஆண்டில் (2009–2010) ரூ.1 கோடி மதிப்பீட்டில் ஒரு குளிர் பதன கிட்டங்கி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், வேளாண் வணிக மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு பண்ணைக் கருவிகள் வழங்குதல்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், வேளாண் வணிக மையங்கள் மூலம் மக்காச்சோளம் கதிர் அடிக்கும் கருவி, டிரெய்லர், கதிர் அடிக்கும் கருவி போன்ற பண்ணை கருவிகள் மற்றும் இயந்திரங்கள் இந்நிதி ஆண்டில் (2009–2010) ரூ.5 கோடி செலவில் வாங்கி விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் அளிக்கப்படும்.

## தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

## 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட வேளாண்மை பயிர் தொகுப்பு நில மேம்பாடு

சிறு மற்றும் குறு விவசாயிகளின் பட்டா தரிசு மற்றும் புஞ்சை நிலங்கள் 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட தொகுப்பு நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு, நில மேம்பாடு மற்றும் புவியியல் ஆய்வு செய்து நிலத்தடி நீர் இருப்பு அறிந்து ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டாருடன் இலவச மின் இணைப்பு பெற்று பயனாளிகளைக் கொண்ட பாசன சங்கத்திடம் வழங்கப்படும்.

இத்திட்டம் இந்நிதி ஆண்டில் (2009–2010) ரூ.675.60 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

# செம்மை நெல் சாகுபடி பரவலாக்கத்திற்கு கோனோ வீடர் மற்றும் மார்க்கர் கருவிகள் வழங்குதல்

தமிழகத்தில் 2009–2010ஆம் ஆண்டு செம்மை நெல் சாகுபடி பரவலாக்கம் செய்திட ரூ.19.65 கோடி செலவில் 94 ஆயிரத்து 703 கோனோ வீடர் மற்றும் 82 ஆயிரத்து 703 மார்க்கர் கருவிகள் 82 ஆயிரத்து 703 விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படும்.

நெல் சாகுபடியில், குறிப்பாக செம்மை நெல் சாகுபடியில் உயர் விளைச்சலை அடைய நீர் மேலாண்மை மிகவும் அவசியமாகிறது. அதற்காக நிலத்தை ஒரே சீராக சமன் செய்யும் லேசர் கருவிகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மாவட்டத்திற்கு 2 வீதம் 30 மாவட்டங்களுக்கு 60 லேசர் கருவிகள் வாங்கி விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் விடப்படும்.

இந்நிதி ஆண்டில் (2009–2010) இத்திட்டம் ரூ.250 லட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

## தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை

### உயர் தொழில் நுட்ப உயர் விளைச்சல் திட்டம்

தமிழகத்தில் ஜீவநதிகள் இல்லை என்பதால் மழையை நம்பியே சாகுபடி செய்யும் மாநிலமாக உள்ளது. எனவே, உயர் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி கிடைக்கின்ற பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்துவதுடன் அதற்கேற்ப உரத்தினை திறம்பட பயன்படுத்துவதற்கு பயிற்சி அளித்து பழமரச் செடிகள் வளர்ப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

தேசிய தோட்டக்கலை இயக்க திட்டம் செயல்படுத்தப்படாத மாவட்டங்களில் இந்நிதி ஆண்டில் (2009–2010) 14,310 எக்டர் நிலப்பரப்பில் ரூ.10 கோடி செலவில் பழச் செடிகள், காய்கறி விதைகள் மற்றும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

## அடர் நடவு திட்டம்

தற்பொழுது சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நிரந்தர வருவாய் தரும் தொழிலாக தோட்டக்கலை பயிர் சாகுபடி அமைந்துள்ளது. இதுவரை தோட்டக்கலை சாகுபடி பரப்பினை விரிவாக்கப் பணியிலேயே முழு கவனம் செயல்படுத்தப்பட்டது. தற்போது உற்பத்தி திறனை மேலும் உயர்த்தும் தொழில் நுட்பங்களை விவசாயிகள் மேற்கொள்ள தீவிர நடவடிக்கை எடுக்கப்படும்.

மா மற்றும் முந்திரி பயிர்களில் குறைவான பரப்பில் அடர் நடவு முறையை 1100 எக்டர் நிலப்பரப்பில் இந்நிதி ஆண்டில் (2009–2010) ரூ.837.60 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

## <u>சேலம் மாவட்டத்தில் 500 ஏக்கர் பரப்பளவில் மாபெரும் தோட்டக்கலை தொகுப்பு உருவாக்குதல்</u>

முன் மாதிரி திட்டமாக சேலம் மாவட்டத்தில், பனைமரத்துப்பட்டி வட்டாரத்தில், கம்மாளப்பட்டி கிராமத்தில் மாபெரும் தோட்டக்கலை கிராமம் உருவாக்கப்படும். சொட்டு நீர் பாசனம், நீர்வழி உரமிடுதல், விவசாயிகள் தொகுப்பு அமைத்தல், விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல் போன்ற பணிகள் இந்நிதி ஆண்டில் (2009–2010) ரூ.350 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

## மாதவரத்தில் இயங்கி வரும் தோட்டக்கலை பயிற்சி மையத்தினை தோட்டக்கலை மேலாண்மை மையமாக தரம் உயர்த்துவது

மாணவர்கள் மற்றும் இதர பயிற்சி பெறுவோர்களுக்கு, உயர் தொழில் நுட்பங்கள், மேம்படுத்தப்பட்ட நவீன சாகுபடி முறைகள், பிளாஸ்டிக்கல்சர் மற்றும் அன்றாட சந்தை வாய்ப்புகளை விவசாயிகளுக்கு தெரிவித்தல் போன்ற பயிற்சிகள் தரமான முறையில் வழங்க மாதவரத்தில் தற்போது செயல்பட்டு வரும் தோட்டக்கலை பயிற்சி மையம், ‘‘தோட்டக்கலை மேலாண்மை மையமாக‘‘ தரம் உயர்த்தப்படும்.

இத்திட்டம் இந்நிதியாண்டில் (2009–2010) ரூ.1543.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

**<u>நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை பயிற்சி மையம் ஏற்படுத்துதல்</u>**

நீலகிரி மாவட்டம் தற்பொழுது மலைக் காய்கறிகள், கொய் மலர்கள் ஆகியவற்றை கட்டுப்பாடான சூழலில் வளர்க்கும் புதிய மையமாக உருவாகி வருவதால், விரிவாக்க அலுவலர்கள் மற்றும் விவசாயிகளின் திறனை மேம்படுத்தும் வகையில் நவீன தொழில் நுட்ப பயிற்சி அளிக்க நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை பயிற்சி மையம் இந்நிதியாண்டில் **(2009–2010) ரூ.88 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.**

## நீலகிரி மாவட்டத்தில் செயல் விளக்க மலரகம் அமைத்தல்

பாசன நீர் மற்றும் வேலையாட்கள் கிடைப்பதற்கறிய சூழ்நிலையில் கொய்மலர் சாகுபடியாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன் பெறும் வகையில் குன்னூர் வட்டம் காட்டேரி பண்ணையில் செயல் விளக்க மலரகம் இந்நிதி ஆண்டில் **(2009–2010)** ரூ.**70** இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

இம்மலரகம் உயர் தொழில் நுட்ப பாலிதீன் பசுமை குடில்களில் ஏற்றுமதிக்கு உகந்த கொய்மலர்கள் உற்பத்தி செய்யும் மாதிரி உற்பத்தி நிலையமாக செயல்படும்.

## <u>அரசு தாவரவியல் பூங்கா மற்றும் ரோஜா தோட்டத்தினை மேம்படுத்துதல்</u>

உதகையில் உள்ள அரசு தாவரவியல்பூங்கா மற்றும் ரோஜா தோட்டத்தின் தனித்தன்மையை மேம்படுத்துவதற்காக அழகிய நில வடிவமைப்பினை ஏற்படுத்துதல், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தாவர வகைகளை பெருவாரியான நிலப்பரப்பில் நடுதல், அழகிய சுற்று வட்டப்பாதைகள், கண்ணாடி இல்லங்கள், பசுமை இல்லங்கள் ஆகிய பணிகள் தாவரவியல் பூங்கா மற்றும் உதகை ரோஜா தோட்டத்தில் இந்நிதி ஆண்டில் (2009–2010) ரூ.150 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

## <u>தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக</u>

## <u>957 பண்ணை பணியாளர்கள் பணி நிரந்தரம்</u>

வேளாண்மைத்துறையின் கீழ் உள்ள, வேளாண்மைப் பல்கலைக் கழகம், வேளாண்மை இயக்ககம் மற்றும் தோட்டக்கலை இயக்ககத்தில் உள்ள பண்ணைகளில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பண்ணை பணியாளர்கள் தினக்கூலிப் பணியாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர். இவர்களை தி.மு.க. ஆட்சிக்கு வரும்போதெல்லாம் படிப்படியாக நிரந்தரம் செய்து வருகிறது.

2006ல் ஆட்சிக்கு வந்த பிறகு தினக்கூலி அடிப்படையில் தோட்டக்கலைப் பண்ணைகளில் பணிபுரிந்து வந்த 1083 நபர்கள் 2007ஆம் ஆண்டிலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பண்ணைகளில் பணிபுரிந்து வந்த 1193 நபர்கள் 2008ஆம் ஆண்டிலும் ஆக மொத்தம் 2276 நபர்கள் ரூ.1300–2000 ஊதிய விகிதத்தில் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர்.

இந்நிதி ஆண்டில் (2009–2010) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் 957 பண்ணை பணியாளர்களின் பணி நிரந்தரம் செய்யப்படும்.

## நுண்ணீர் பாசனம்

தமிழகத்தில் பெரும்பாலும் நிலத்தடி நீரை நம்பி விவசாயம் செய்ய வேண்டிய நிலையில், நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வரும் நேரத்தில், நிலத்தடி நீரை நுண்ணீர் பாசன திட்டத்தின் மூலம் சொட்டுநீர் பாசன முறையில் நீரை சிக்கனப்படுத்துவதோடு விவசாயிகள் உற்பத்தியை பெருக்கவும் வழிவகை செய்யப்படுகிறது.

மைய அரசின் நெறிகாட்டுதலின் பேரில் சொட்டுநீர் பாசனத்திற்கு மைய அரசு 40 சதவீதம், மாநிலஅரசு 10 சதவீதம் ஆக 50 சதவீதம் வழங்கி திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. 50 சதவீத தொகையினை செலுத்தி இந்த நல்ல திட்டத்தினை நிறைவேற்றி கொள்ள விவசாயிகளால் இயலாத நிலை இருப்பதை அறிந்து, நுண்ணீர் பாசனத் திட்டத்திற்கு இனிமேல் மத்திய அரசு 40 சதவீதம், மாநில அரசு 25 சதவீதம், மொத்தம் 65 சதவீதம் மானியம் அளிக்கப்படும்

மீதமுள்ள 35 சதவீத செலவினை விவசாயிகள் ஏற்று தங்கள் நிலங்களில் சொட்டுநீர் பாசன முறையை நடைமுறைப் படுத்தி, தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெற வேண்டுமென தெரிவித்துக் கொள்வதுடன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்திற்கு மாநில அரசின் சார்பாக 25 சதவீதம் மானியம் வழங்கப்படுமென முடிவு செய்துள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.